2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

அதிகாரிகளுடன் கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு தமிழக ஆளுநர் மாளிகை செய்தி வெளியிட்டுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், இதையெல்லாம் நாம் பேசி முடித்துவிட்டோம். அவர்கள் வெளிநடப்பும் செய்துவிட்டார்கள்.* (குறுக்கீடு) *அது வேண்டாம்.* (குறுக்கீடு) *அது எதற்கு?*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் தவறாகச் சொல்லப்போவது இல்லை. இங்கே வெளிநடப்புச் செய்கின்றபோது ஒரு குறிப்பிட்ட செய்தியைச் சொன்னார்கள். மாநில சுயாட்சிக் கொள்கைக்கு எதிரானது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், அது வேண்டாம். அது புது விவாதத்தைக் கிளப்பும்.* (குறுக்கீடு) *மாண்புமிகு அமைச்சர், வேண்டாம்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதிராக ஒன்றும் சொல்லவில்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். பிறகு நீங்களே இப்படிச் சொன்னால் எப்படி?*(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள் என்னவென்று கேட்டீர்களென்றால். . .* (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *நான் என்ன சொல்ல வருகின்றேன் என்று கேட்டுவிட்டு, நீங்கள் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதனைப் புரிந்துகொண்டேன். நீங்கள் சொல்ல வருவது எனக்குப் புரிகின்றது.* (குறுக்கீடு) *இல்லை, இல்லை, அது வேண்டாம்.* (குறுக்கீடு)

2018 ஜூன் 27]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *நான் என்ன சொல்ல வருகின்றேன் என்பது எப்படி உங்களுக்குத் தெரியும்? நான் சொன்னால்தானே தெரியும்! ஒரு நிமிடம் இதைக் கேளுங்கள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் புதுப் பிரச்சினைகளைக் கிளப்பி. . .* (குறுக்கீடு) *எனக்கு நேரம் இல்லை.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *அவருக்குப் பதில் சொல்வதற்கெல்லாம் நான் போகவில்லை. ஒரு புது விஷயத்தைச் சொல்வதற்காகத்தான் நான் கேட்கின்றேன்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதே பொருள் குறித்து ஏதாவது எழுப்பினீர்களென்றால், அதற்கு இந்தச் சபையில் பதில் சொல்ல வேண்டிவரும்.* (குறுக்கீடு) *எனக்கு நேரம் இல்லை.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய கடந்த காலத்தில் ஆளுநருக்கு இருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றிய ஒரேயொரு செய்தியை மட்டும் இங்கே சொல்லப் போகின்றேன். அதை ஏன் வேண்டாம் என்கின்றீர்கள்?* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநரைப் பற்றி பேச வேண்டாம் என்று நான் அவர்களுக்கு உத்தரவு போட்டிருக்கின்றேன்.* (குறுக்கீடு) *அவர்கள் இன்று அதிகாரிகளை விளித்துப் பேசியதால், நான் அந்த விளக்கத்தைத் தெரிவித்தேன். அந்த விளக்கத்தை அவர்கள் ஏற்கவில்லை, அவர்கள் வெளியேறிவிட்டார்கள். நீங்கள், அதோடு விட்டுவிடுங்கள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *நான் சொல்வது தவறு என்றால், அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.* (குறுக்கீடு) *அதை ஏன் நீங்கள் வேண்டாம் என்கின்றீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சருடைய பேச்சை நீக்குவது என்பது எப்படிச் சரியாக வரும்?* (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *நான் சொல்வதற்கு முன்பே அதை மறுக்கின்றீர்களே, அது எப்படி என்று கேட்கின்றேன். நான் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்கிறேன்.* (குறுக்கீடு) *ஒரேயொரு முக்கியமான விஷயத்தைச் சொல்கின்றேன்.* (குறுக்கீடு) *ஒரு நிமிடம், ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்கின்றேன்.* (குறுக்கீடு) *ஒரேயொரு நிமிடம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், எனக்கு அது சரியாகப்படவில்லையென்றால், அதனை நான் நீக்க*

வேண்டிவரும். அதனால் அது வேண்டாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திரும்பத் திரும்ப பேசும்போது நீங்கள் அவருக்கு ஒரு* ruling *கொடுத்தீர்கள். ஆளுநரைப் பற்றி அவையில் விவாதங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்ற மரபு இருக்கின்றது. ஆகவே, அதை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்ட அந்த* ruling-*க்கு சபையின் உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்பட மரியாதை தர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், நல்ல நோக்கில் மரபின்படி அனைவரும் நடக்க வேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நான் அன்பான வேண்டுகோளை விடுக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான், அதனை விட்டுவிடுங்கள்.*

முற்பகல் 11-30

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2018 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.